**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 01.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தென்னை வேர்வாடல் நோயை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – நோவோனெசிஸ் ஒப்பந்தம்

தென்னை வேர்வாடல் நோயைக் (RWD) கட்டுப்படுத்துவதற்கான உயிரியல் தீர்வுகளை உருவாக்கவும், மண் மற்றும் தென்னை மரங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் (TNAU), பெங்களூரைச் சேர்ந்த லிங்பி, டென்மார்க்கை தலைமையிடமாகக் கொண்ட நோவோனெசிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.

ரூ.67 லட்சம் மதிப்பிலான, மூன்று ஆண்டுகளுக்கான இத்திட்டத்தில், புரோபயாட்டிக் பாக்டீரியா கூட்டமைப்புகள் மற்றும் ஊட்டச்சத்து அடிப்படையிலான உயிரியல் தீர்வுகளை உருவாக்கி, அவற்றின் செயல்திறனை ஆய்வு செய்வதுடன், வயல்வெளி பரிசோதனைகள் மற்றும் விவசாயிகளின் பங்கேற்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது.

தமிழகத்தின் முக்கிய தென்னை சாகுபடி பகுதிகளான பொள்ளாச்சி, கோவை, தேனி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை வேர்வாடல் நோய் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் 30 முதல் 60 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 60 சதவீதம் வரை மகசூல் இழப்பு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண் வளம், தென்னை மரங்களின் வீரியம் மற்றும் காய் மகசூலை மேம்படுத்தும் வகையில் பயனுள்ள புரோபயாட்டிக் நுண்ணுயிர்த் தொகுப்புகள் மற்றும் பொருத்தமான

ஊட்டச்சத்துகள் ஆய்வு செய்யப்பட உள்ளன. மேலும், விவசாயிகளின் திறன் மேம்பாட்டுக்கான அறிவு மையம், பயிற்சிகள், வயல்வெளி நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் விரிவாக்கத் துறைகள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளுடன் (FPOs) இணைந்து நடத்தப்பட உள்ளன.

நோவோனெசிஸ் நிறுவனத்தின் சார்பில் மண்டலத் தலைவர் மற்றும் மூத்த துணைத் தலைவர் (MEIA) திரு. கிருஷ்ண மோகன் புவாடா, பங்குதாரர் உறவுகளுக்கான வெளிப்புற இயக்குநர் திரு. கிருஷ்ணன் ஜி.எஸ்., மண்டல உத்தி மற்றும் வர்த்தக மேம்பாட்டுத் தலைவர் (MEIA) டாக்டர் அனிஷா கோயல், வேளாண்மையியல் மூத்த ஆலோசகர் (MEA) டாக்டர் மோசஸ் கிறிஸ்டோபர் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பதிவாளரும் பொறுப்பு துணைவேந்தருமான டாக்டர் எம். ரவீந்திரன், CPMB&B இயக்குநர் டாக்டர் என். செந்தில், உயிரித் தகவலியல் துறை பேராசிரியரும் தலைவருமான டாக்டர் எல். அருள், முதன்மை ஆய்வாளர் டாக்டர் எஸ். நக்கீரன், தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை இணை முதன்மை ஆய்வாளர் டாக்டர் பி. ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டாண்மையின் மூலம் ஆய்வு முடிவுகளை நடைமுறைக்கு ஏற்ற, விரிவுபடுத்தக்கூடிய தொழில்நுட்பங்களாக மாற்றி, தமிழகத்தில் நிலையான தென்னை உற்பத்திக்கு உதவும் தீர்வுகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**